**CHAPTER XXV, CODE OF CRIMINAL PROCEDURE**

**IN THE COURT OF THE II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT, THIRUVALLUR AT POONAMALLEE**

<u>SESSIONS CASE NO. 84/ 2019</u>

Deposition of Witness for prosecution: P.W. 2

| | | | |
|---|---|---|---|
| **Name** | **Tmt . Mery** | **Caste** | |
| **Father's Name** | **W/O. Sampath** | **Calling** | |
| **Age** | **52** | **Religion** | |
| **Village** | | **Taluk** | |

Tmt.M.Latha, Translator, Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1872

on 01.10.**2019.**

முதல் விசாரணை:-

நான் தற்போது பழைய எண். 8, புதிய எண். 20 , மதுரவாயல் ஏரிக்கறை ஆலப்பாக்கம் , சென்னை 95 என்ற விலாசத்தில் வசித்து வருகிறேன். என் கணவர் பெயர் சம்பத். எனக்கு 3 பெண்கள். 1 மகன். என் மகன் பெயர் ராஜேஷ். லட்சுமி என்னுடைய பெரிய மகள் பெயர். 2 வது மகள் பெயர் சுஜாதா, 3 வது மகள் பெயர் கோமலா என்கிற கோமலசுந்தரி. என் மகனுக்கு திருமணமாகிவிட்டது. என் மருமகள் பெயர் நளினா. பேத்தி பெயர் ரேமா. என் மகள்களை திருமணம் செய்து கொடுத்துவிட்டேன். நான் என் மகன் மருமகள் , பேத்தி அனைவரும் கூட்டு குடும்பமாகத்தான் விசத்து வந்தோம். இந்த வழக்கில் இறந்தவர் என் மகன். நாங்கள் கார் வாங்கி என் மகனுக்கு கொடுத்திருந்தோம். அவர் வாடகைக்கு ஓட்டி கொண்டிருந்தார். என் மகனின் செல்போன் நெம்பரில் கடைசி 3 நெம்பர் மட்டும் தான் எனக்கு தெரியும், அந்த கடைசி 3 நெம்பர் 111 என்று வரும். எனக்கு எழுத படிக்க தெரியாது. என் மகனுக்கு குடிபழக்கம் உண்டு. சர்ச்சிற்கு போவான் வருவான். என் மகனுக்கு 2 வது எதிரி பத்மாவதி உடன் பழக்கம் உள்ளதாக கேள்வி பட்டேன். ஏரிக்கரை சமயபுரத்தம்மன் கோவில் அருகில் வசிக்கிறார். நான் இவ்வாறு சொல்கிறார்கள் இவ்வாறான பழக்கம் வேண்டாம் என்று கூறிய போது என் மகன் நான் பிரண்டாகத்தான் பழகுகிறேன் என்று தெரிவித்தார். 13 ஆம் தேதி மாலை 5 மணி அளவில் குமரேசன் என் வீட்டிற்கு வந்து

சண்டை போட்டுவிட்டு போனார். என் மருமகளை அழைத்து என்ன முருகேசன் சண்டை போட்டுவிட்டு போகிறான் என்று கேட்ட போது பத்மாவதி உடன் பேச்சு வார்த்தை வைத்து கொள்ளக்கூடாது என்று சொல்லு என்றும் என் மருமகளையும் எனது மகனையும் மிரட்டி சென்றார். அதன் பிறகு இது எல்லாம் எனக்கு தேவையா என்று என் மகனை திட்டினோம். 2 வது எதிரி 1 வது எதிரியிடம் பேசியதால் அவ்வாறு திட்டி விட்டு போகிறான் என்று தெரிவித்தான். அதன் பிறகு மறு நாள் என் மகன் வேலைக்கு போனார். 15.7.2018 அன்று என் மகன்' சர்சிற்கு போய்விட்டு வந்து வெளியில் போய்விட்டு வருவதாக கூறிவிட்டு சென்றார். அதன் பிறகு மாலை 7.30 மணி ஆகிவிட்டும் என் மகன் வராததால் எனது மருமகள் நளினி போன் மூலம் என் மகனிடம் கேட்டார். மகாலட்சுமி கட்டை தொட்டி ஏரிக்கரை அருகே காரை விட்டுவிட்டு நண்பர்கள் உடன் பேசிக்கொண்டிருப்பதாகவும் சுந்தர் ராஜ் மற்றும் சிவகுமார் பேசிக்கொண்டிருப்பதாகவும் குமரேசன் வருவதாக தெரிவித்துள்ளார் என்றும் பேசிவிட்டு வருகிறேன் என்றும் தெரிவித்துள்ளார். அதன் பிறகு சர்ச்சில் மாலை 7. 30 மணிக்கு மீட்டிங் இருப்பதால் சர்ச்சிற்கு போய்விட்டோம். சர்ச் முடித்துவிட்டு வந்து பார்த்தோம். அப்போதும் என் மகன் வீட்டிற்கு வரவில்லை. அதன் பிறகு சாப்பிட்டுவிட்டு சிறிது நேரம் பார்த்தோம். அப்போதும் வரவில்லை. அதன் பிறகு போன் செய்தோம். போன் எடுக்கவில்லை. சரி அருகில் தானே இருக்கிறார் என்று என் மருமகளை அழைத்து கொண்டு போய் பார்த்த போது கார் முன்னே என் மகன் விழுந்து கிடந்தார். நாங்கள் தண்ணீர் தெளித்து எழுப்பி பார்த்தோம். அவர் அசையவில்லை. சரி போதையாக இருக்கும் என்று அருகில் நின்று கொண்டிருந்த மணிகண்டன் தனசேகரன், வினோத்குமார் ஆகியோர்களை என் மகனை காரில் எடுத்து போடும்படி கேட்டுக்கொண்டேன். இங்கேயே விட்டுவிட்டால் என்ன செய்வது கொஞ்சம் வீட்டு அருகில் விட்டு விடுங்கள் என்று கேட்டோம். அந்த பசங்க வீட்டு அருகில் கொண்டு வந்து விட்டுவிட்டார்கள். அந்த 3 பேரில் ஒருவர் கார் ஓட்டி வந்தார். மற்றவர்கள் அவரவர்கள் காரில் வந்தார்கள். நாங்கள் நடந்து வந்தோம். காரை என் கடை பக்கத்திலேயே நிறுத்தவிட்டு கார் கண்ணாடியை திறந்துவிட்டுவிட்டு போதை தெளிந்து எழுந்துவிடுவார் தொல்லை செய்யாதீர்கள் என்று கூறிவிட்டு அவர்கள் போய்விட்டார்கள். அதன் பிறகு கொஞ்சநேரம் பொறுத்து நான் கார் கண்ணாடியை முழுவதுமாக

திறந்துவிட்டுவிட்டு நான் போய் படுத்துக்கொண்டேன். காலை சுமார் 4 மணியளவில் பாத்ரூம் போவதற்காக எழுந்துவந்தேன். சரி என் மகன்எழுந்து விட்டானா? என்று பார்க்கலாம் என்று காரி இருக்கும் இடத்திற்கு சென்று பார்த்தேன். நான் என் மகனை தட்டிப்பார்த்து எழுப்பினேன். அவன் எழுந்திருக்கவில்லை. அதனால் போய் எனது கணவர் மற்றும் எனது மருமகனிடம் சொல்லிவிட்டு எனது மூத்தார் மகன் விக்டர்வேலிடம் உன் அண்ணன் குடித்துவிட்டு படுத்தான் எழுந்திருக்கவில்லை. ஆஸ்பிட்டல் போகவேண்டும், வா என்று அழைத்தேன். அதன்பிறகு வேலப்பன் சாவடியில் உள்ள ஏசிஎஸ் மருத்துவமனைக்கு கொண்டு சென்றோம். அங்கு அவசர உதவிக்கு இருக்கும் டாக்டரிடம் இவ்வாறு அவன் எழுந்திருக்கவில்லை என்று தெரிவித்தோம். அதனால் அவர் காரிலேயே எனது மகன் கையை பிடித்தும் டிகிரி வைத்தும் பார்த்தார். அவர் ஏற்கனவே உயிர் போய்விட்டது அம்மா என்று தெரிவித்தார். நாங்கள் அங்கிருந்து வீட்டிற்கு எடுத்துவந்து போட்டு எங்கள் குல வழக்குப்படி நல்ல அடக்கம் செய்தோம். 16.07.2018 அன்று மாலை 6 மணியளவில் கிறிஸ்துவ முறைப்படி புதைத்துவிட்டோம். அதன்பிறகு எங்களுக்குள் ஒரு சந்தேகம். எவ்வளவு குடித்தாலும் எழுந்துவந்துவிடுவான். 7.30 மணிக்கு போன் செய்தாயே? என் மகன் எங்கிருந்தான்? யாருடன் இருந்தான் என்று என் மருமகளிடம் கேட்டேன். சிவக்குமாரும், சுந்தர்ராஜனுடன் இருந்ததாகவும், குமரேசன் வருவதாக சொல்லியிருக்கிறான். நான் பேசிவிட்டு வந்துவிடுகிறேன் என்று என் மகன் சொல்லியதாக என் மருமகள் தெரிவித்தார். அதன்பிறகு 2 நாட்கள் பொறுத்து மேற்சொன்ன சுந்தர்ராஜன், சிவக்குமார் ஆகியோரை எங்கள் வீட்டிற்கு அழைத்து என்ன நடந்தது என்று கேட்டோம். அப்போது அவர்கள், நாங்கள் அன்றைய தினம் குடித்தது உண்மை என்றும், நாங்கள் குடித்துவிட்டு வீட்டிற்கு கிளம்பினோம் அப்போது குமரேசன் வந்தார் என்றும் குமரேசன் நாங்களும் தண்ணிஅடிக்க போகிறோம் என்று கூறிவிட்டு சரி உங்களை விட்டுவிட்டு வாங்கிக்கொண்டு வந்துவிடுகிறேன் என்று குமரேசன் கூறினார் என்றும், சுந்தர்ராஜன் பக்கத்தில் இருக்கிறான் அவன் போய்விடுவான் என்றும் என்னை மட்டும் விட்டுவிட்டு வருவதாக கூறி சிவக்குமாரை அவரது வீட்டில் விட்டுவிட்டு, ராஜேஜை நிற்க சொல்லியிருக்கிறேன், நான் போய் சரக்கு வாங்கிக்கொண்டு போகிறேன் என்று கூறிவிட்டு குமரேசன் சென்றதாகவும், இதுதான் தெரியும் என்றும் அவர்கள் இருவரும் எங்களிடம் தெரிவித்தார்கள். எனவே, பத்மாவிற்கும்

ராஜேஜிற்கும் பழக்கம் என்றும், நடுவில் குமரேசன் நண்பராக எ2 வீட்டிற்கு போனதாகவும், ராஜேஷ்தான் எ1ஐ எ2விற்கு அறிமுகப்படுத்தி வைத்ததாகவும், சொல்லியுள்ளான். அதன்பிறகு ராஜேஜை விட்டுவிட்டு எ2விற்கு எ1வுடன் பழக்கம் ஏற்பட்டுவிட்டது என்றும், அதன்மூலமாகத்தான் ஏதோ நடந்துள்ளது என்று நாங்கள் அழுதுகொண்டிருந்தோம். சுற்றியிருந்தவர்கள் சாதாரணமாக இறந்திருந்தால் முகம் தெளிவாக இருக்கும். இதில் ஏதோ நடந்திருக்கிறது என்று கூறினார்கள். நாங்கள் பார்க்கும்போது முகம் கருப்பாக இருந்தது. எனவே, எனது மருமகள் நான் போய் புகார் கொடுக்க போகிறேன், என் கணவருக்கு ஏதோ நடந்துள்ளது என்று கூறி நான் குமரேசன் அண்ணன்மேல்தான் சந்தேகப்படுகிறேன் என்று புகார் எழுதிக்கொண்டு 20.07.2018ம் தேதி மாலை 7 மணிக்கு காவல் நிலையம் சென்று புகார் கொடுக்கப்போனோம். அப்போது என் பிள்ளை சாவில் ஏதோ மர்மம் இருக்கிறது என்று கூறி புகாரை கொடுத்துவிட்டு வந்துவிட்டோம். மறுநாள் 21ம் தேதி காவல் நிலையத்தில் இருந்து மாலை 7.30 மணியளவில் போன் வந்தது. சரியென்று நான், எனது கணவர், எனது மருமகள் ஆகியோர் போனோம். அங்கே போனவுடன் ஒரு கேமரா அங்கிருந்து எடுத்துவந்திருக்கிறோம், அதை போட்டு காட்டுகிறோம், பாருங்கள், பார்த்துவிட்டு யாரென்று சொல்லுங்கள் என்று போலிசார் கூறி கேமராவை போட்டோ போட்டு காண்பித்தார்கள். அதில் எங்கள் கார் நிற்கிறது. அந்த கார்மீது குமரேசன்தான் இரண்டு டம்ளர் வைத்து எல்மெட்டை கழற்றாமலேயே சரக்கை எடுத்து ஊற்றினார். அதன்பிறகு தண்ணீர் ஊற்றுகிறார். அதன்பிறகு பேண்ட் பாக்கெட்டிலிருந்து ஏதோ ஒரு பவுடரை எடுத்து ஒரு டம்ளரில்மட்டும் கலக்குகிறார். சிறிது நேரம் பொறுத்து எல்மெட்டை கழற்றிவைத்துவிட்டு குமரேசன் போன் பேசுகிறார். அதன்பிறகு சிறிதுநேரம் அங்கேயும் இங்கேயும் உலாத்துகிறார். சிறிதுநேரம் கழித்து எனது மகன்˙ அங்கே வருகிறார். வந்து காரின் கதவை திறந்து முன்பக்க கதவை திறந்து முன்பக்க சீட்டில் எனது மகன் உட்காருகிறார். பிறகு எ1 குமரேசன் இரண்டு டம்ளரை எடுத்துக்கொண்டு வந்து கலந்த டம்ளரை என் மகனிடம் கொடுத்துவிட்டு எ2 கதவை திறந்து காரில் உட்கார்ந்துகொள்கிறார். அதை குடித்துவிட்டு கொஞ்ச நேரத்தில் எனது மகன் முன்பகுதியில் உள்ள கதவை திறந்து வெளியில் வருகிறார். இன்னொரு கதவை திறந்து குமரேசன் வெளியில் வருகிறார். கேமராவில் எனது மகன் கையை நீட்டி கேட்பது தெரிகிறது. எ1 எதிரி

தட்டிவிடுகிறான். எனது மகன் கீழே விழுகிறான். இரண்டு முறை என் மகன் இரண்டு முறை தூக்கி போடுகிறது. அதன்பிறகு காரின் மேல் இருந்த எல்மெட்டை எடுத்து போட்டுக்கொண்டு குமரேசன் போய்விடுகிறார். இந்த விவரங்களை நான் சிசிடி கேமாராவில் பார்த்தேன். விசாரணையில் அது யாரென்று கேட்டார்கள். நாங்கள் அது குமரேசன்தான் என்றும், நாங்கள் சிறுவயதிலிருந்து ஒன்றாக இருந்தவர்கள் என்று தெரிவித்தேன். குமரேசனுக்கும் என் பையனுக்கும் தனிப்பட்ட விரோதம் கிடையாது. எ2வுடன் பழகியதால்தான் விரோதம் ஏற்பட்டது. எ2 எதிரி சொல்லியதன்பேரில் எனது மகனை எ1 எதிரி தீர்த்து கட்டியுள்ளார். ஆஜர் எதிரிகள்தான் நான் சொல்லும் இரண்டு நபர்களாகும். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

ஒன்றாவது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.

நான் மேலே சொன்ன விலாசத்தில் சுமார் 50, 60 வருடங்களாக நாங்கள் குடியிருந்து வருகிறோம். எங்கள் வீட்டிலிருந்து வலது பக்கம் திரும்பி வருகின்ற தெருவில் வந்தால் கார் நிறுத்திவைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு சுமார் 5 நிமிடத்தில் வந்துவிடலாம் என்றால் சரி. எனது மகன் வேலைக்கு போய்விட்டு வந்தாலோ வெளியில் போய்விட்டு வந்தாலோ இரவு ஒன்பதரை அல்லது பத்து மணியளவில் வீட்டிற்கு வந்துவிடுவார் என்றால் சரிதான். நாங்கள் சராசரியாக இரவு பத்து பத்தரை மணியளவில் தூங்கிவிட்டு காலை சுமார் 5 மணியளவில் எழுந்துகொள்வேன் என்றால் சரி. நானும் எனது மகனும் தரைதளத்தில் கதவுதான் வேறு ஒரே வீட்டில் வசித்து வருகிறோம். என் மகன் எங்கு போகிறார், எங்கு வருகிறார் என்ற விவரங்களை எனது மருமகள் போன் மூலம் கேட்பார். நான் தெரிந்துகொள்வேன். குமரேசன் எனது பங்காளி வழி உறவு. எனது மகனுக்கு மாமா முறை. எ1 எதிரி அடிக்கடி எங்கள் வ ீட்டிற்கு வந்து செல்வார். எ1 எதிரி நான் சொன்னதுபோல் ஒருமுறை வந்து மிரட்டிசென்ற விவரத்தை எ1 எதிரி குடும்பத்தாரிடம் தெரிவிக்கவில்லை. அது குறித்து போலிசிடமும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். 15.07.2018 அன்று மாலை எனது மருமகள் நளினி போன் பேசினார் என்ற விவரம் எனது மருமகள் கூறிதான் எனக்குத் தெரியும் என்றால் சரிதான். நாங்கள் சர்ச்சிற்கு போய்விட்டு வீட்டிற்கு வரும்போது சுமார் இரவு 9.30 மணியிருக்கும். நாங்கள் போன் பேசிவிட்டு ஏழரை மணிக்கு சர்ச்சிற்கு போனோம்.

ஒன்பதரை மணிக்கு நான் சர்ச்சிற்கு போய்விட்டு வரும்போது என் வீடு பூட்டப்பட்டிருந்தது என்றால் சரிதான். நான் சர்ச்சிற்கு போயிருந்த 7.30 மணிமுதல் 9.30 மணி இடைவெளியில் ராஜேஷ் வந்துபோனாரா, என்று தெரியாது என்றால் சரிதான். சர்ச்சிற்கு போய்விட்டு வந்த தகவலை நான் போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் பார்த்த வீடியோவில் என் மகன் முதலில் பேண்ட் சர்ட் போட்டிருக்கிறார். அதன்பிறகு லுங்கி சர்ட் அணிந்திருக்கிறார் என்று போலிசார் கேட்டார்களா என்றால் நாங்கள் சர்ச்சிற்கு போயிருந்தோம், சாவியை வைத்துவிட்டு போகும் இடம் எனது மகனுக்கு தெரியும் அவன்வந்து துணியை மாற்றவிட்டு போயிருக்கலாம் என்று தெரிவித்தேன். சர்ச்சிற்கு போன இடைப்பட்ட நேரத்தில் என் மகன் வீட்டிற்கு வந்துவிட்டு போனாரா என்று யாரையும் நான் கேட்கவில்லை. நாங்கள் சர்ச்சிற்கு போயிருந்த நேரத்தில் என் மகன் எத்தனை மணிக்கு வந்தார் எத்தனை மணிக்கு போனார் என்ற விவரம்பற்றி எனக்கு தெரியாது. போலிசார் வீடியோவை போட்டு காண்பிக்கும்போது 15.07.2018 அன்று மாலை 8.20 முதல் 9.30 வரை கார் நிறுத்தப்பட்டிருந்த இடத்தில் எனது மகன் இல்லாமல் இருந்ததைக் குறித்து என்னிடம் விசாரித்தார்களா என்று எனக்கு ஞாபகமில்லை. நான் சர்ச் முடிந்து வீட்டிற்கு வந்து பார்த்தபோது எனது மகன் கீழே கிடந்தபோதே தண்ணீர் தெளித்து பார்த்தோம். தண்ணீர் தெளித்து பார்த்தபோது கண் அசைவோ, கால் அசைவோ ஏதாவது பார்த்தீர்களா என்றால் அதை நான் பார்க்கவில்லை. கோபத்தில் இருந்ததினால் நான் பார்க்கவில்லை. வீட்டிற்கு காரில் கொண்டுபோனபிறகு தண்ணீர் தெளித்து பார்த்தீர்களா என்றால் எழுப்பினால் சண்டை போடுவான், எழுந்தால் வந்துவிடுவான் என்று நினைத்துக்கொண்டு நாங்கள் போய்விட்டோம். ஜன்னல் கதவை நான்தான் திறந்துவிட்டு போனேன். அதன்பிறகு சுமார் அதிகாலை நாலு மணிக்கு தற்செயலாக சென்று பார்த்தேன் என்றால் சரி. இரவு 10.30 மணியிலிருந்து காலை 4 மணிவரை இடையில் யாராவது வந்தார்களா? போனார்களா? என்ன நடந்தது? என்று எனக்குத் தெரியாது என்றால் சரி. எங்கள் வீட்டிற்கு வெளியே உள்ள அந்த சாலை விடியவிடிய போக்குவரத்து உள்ள சாலை என்றால் சரி. ஏற்கனவே இவ்வாறு காரில் விட்டுவிட்டு போதை தெளிந்தபிறகு வந்துவிடுவார் என்றால் சரி. இவ்வாறு என் மகன் குடித்துவிட்டு வருவார், காரில் தூங்கவிட்டு சென்றுவிடுவோம் என்ற விவரம் அருகில் இருப்பவர்களுக்கு தெரியும். முகம்

கருப்பாக இருந்த விவரத்தை போலிசிடம் சொல்லவில்லை என்றால் சரி. உறவினர்களிடம் என் மகனின் இறப்புச்செய்தி சொல்லித்தான் அடக்கம் செய்தோம். எங்கள் உறவினர்கள் எங்கள் வீட்டின் அருகிலேயே அதிகபேர் உள்ளனர் என்றால் சரி. சர்ச் ஆட்கள் சுமார் 300 பேர் அந்த இடத்தில் இருப்பார்கள். கிறிஸ்துவ முறைப்படி வேதம் படித்துதான் என் மகனை அடக்கம் செய்தார்கள். அடக்கம் செய்யும்போது என் மகனின் முகம் கருப்பாக இருந்தது என்று யாரும் சொல்லவில்லை. அதன்பிறகுதான் எல்லோரும் போகும்போது இது குறித்து தெரிவித்தார்கள். காலையில் அவரை பார்க்கும்போது அவருக்கு ரத்தக்கசிவு இருந்ததா என்றால் நான் பார்க்கவில்லை. மருத்துவமனைக்கு போய்விட்டு திரும்பி வந்து வீட்டில் கிடக்கும்போது ரத்தக்கசிவு இருந்தது. நான் எனது போலிஸ் விசாரணையில் ஏழரை மணிக்கு எனது மருமகள் நளினி போன் செய்தபோது சிவக்குமார், சுந்தர்ராஜன் மட்டும் இருக்கிறார்கள் என்றும் குமரேசன் வந்துகொண்டிருக்கிறார் என்றும், என்னுடைய போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதேபோல் சர்ச்சிற்கு போன விவரத்தை நான் எனது போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. அதன்பிறகு எனது மருமகள் ராஜேஷிற்கு போன் செய்து அவர் போனை எடுக்கவில்லை என்ற விவரத்தையும் போலிசார் விசாரணையில் நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் தண்ணீர் தெளித்து எழுப்பிய விவரத்தை போலிசாரிடம் சொல்லவில்லை என்றால் சரி. என் மகனை தூக்கி காரில் கிடத்தியவர்களிடம் இங்கே விட்டுவிட்டு போய்விட்டால் எப்படி வீட்டிற்கு கொண்டுவந்து விட்டுவிட்டு போங்கள் என்ற கூறிய விவரத்தை போலிசில் சொல்லவில்லை என்றால் சரி. அதேபோல் எங்கள் வீட்டில் கொண்டுவந்துவிட்ட நபர்கள் போதை தெளிந்தால் அவரே வந்துவிடுவார் என்ற சொல்லப்பட்ட விவரத்தை நான் போலிசிடம் சொல்லவில்லை என்றால் சரி. அவரது முகம் கருத்திருந்த விவரத்தையும் போலிஸ் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரி. இரண்டு நாட்கள் கழித்து நாங்கள் சிவக்குமாரையும், சுந்தர்ராஜனையும் வீட்டிற்கு அழைத்து விசாரித்த விவரத்தையும் அவர்கள் அதற்கு பதில் அளித்த விவரத்தையும் போலிசிடம் சொல்லவில்லை என்றால் சரி. அதேபோல் ராஜேஷிற்கும் எ2க்கும் இடையே பழக்கம் இருந்தது என்றும் இடையில் எ1 நண்பராக எ2 வீட்டிற்கு போனதாகவும், ராஜேஷ்தான் எ1ஐ எ2விற்கு அறிமுகப்படுத்தியதாகவும், அதன்பிறகுதான் அதன்பிறகு எ1க்கும் எ2க்கும்

பழக்கம் ஏற்பட்டதாகவும், அதன்மூலம் ஏதோ நடந்துள்ளது என்று நாங்கள் அழுதுகொண்டு இருந்தோம் என்றும் இந்த விவரங்களை போலிசார் விசாரணையின்போது சொல்லவில்லை என்றால் சரியல்ல. கேமரா போட்டு காண்பித்த பிறகு இந்த விவரங்களையெல்லாம் தெரிவித்தோம். அவ்வாறு நாங்கள் சொல்லியதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. போலிஸ் எங்களிடம் சிசிடிவி பதிவில் இருப்பது யாரென்று கேட்டபோது அது குமரேசன்தான் என்றும் நாங்கள் சிறிய வயதிலிருந்து ஒன்றாக இருந்தவர்கள் என்றும் போலிசாரிடம் சொல்லவில்லை என்றால் சரியல்ல. எ2 எதிரி சொல்லியதால்தான் எ1 எதிரி, ராஜேஜை தீர்த்துவிட்டதாக போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் சரியல்ல.

(நேரமின்மை காரணமாக குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது).